உ

சிவமயம்

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துத்

திராவிடமாபாடியகர்த்தராகிய

ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்

180-வது குருபூஜைவிழாமலர்

குரோதி – சித்திரை – ஆயிலியம்

20—4—1964

வெளியீடு எண் 191.

உ

சிவமயம்

கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தரவிருத்தி

இஃது

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபத்தொன்றுவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

வெளியிடப்பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனம்

1964

உரிமை பதிவு.

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

பதிப்புரை

ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் சிவ பரிபூரணம் எய்திய சித்திரை ஆயிலிய நாளன்று நடைபெறும் குருபூசைநாளில் வழக்கம்போலவே அவர்களால் அருளிச் செய்யப்பட்ட நூல் - உரைகளை அச்சிட்டு வழங்கும் நியமத்தைக்கடைப்பிடித்து இவ் வாண்டில் அவர்களாலே அருளப்பட்ட 'கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத் தர விருத்தியை அச்சிடுக' என இவ்வாதீ னத்து இருபத்தொன்றாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி இஃது அச்சிட்டு வழங்கப்படுகிறது.

இங்ஙனம்,

சித்தாந்த சைவமணி—

த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,

ஆதீனவித்துவான்.

சிவமயம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.

ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்

நூலாசிரியர் வரலாறு

இந்நூலாசிரியரது பிள்ளைத்திருநாமம் முக்களாலிங்கர் என்பது. இவர்களுடைய தீட்சாநாமம் சிவஞானமுனிவர் என்பதாம். தவத்தான் மிக்கோருடைய சூழலில் தலைமை பூண்டொழுகிவந்தமையின் இவர் மாதவச் சிவஞானமுனிவர் என யாவரானும் கொண்டாடப்பெற்றார். சிவஞானிகளுக்குரிய இலக்கணங்கள் எவற்றினும் குறைவற நிறைந்து இவர் ஞானயோகியாகவே விளங்கியமையான் இயல்பாகப் பெற்ற தீட்சா நாமமே காரணத் திருநாமமாகவும் சிறந்தது ஆகலின், இவர்களை ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் எனச் சந்நிதானங்களும், தம்பிரான் கூட்டத்தினர்களும் வழங்கி வந்தனர். ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் அருளிச்செய்த சிவஞான போதத்துக்குத் தமிழிலே பேருரை கண்ட பெரியோர் இவராகலின், திராவிட மாபாடியகாரர் என அறிவுடையுலகம் இவரை அழைப்பதாயிற்று. ஆதீனத்தில் உள்ள அனைவரும் இவரை 'ஆதீன குல தெய்வம்' எனப் பாராட்டினர்.

பண்டை நற்றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும் நல்ல குடியிலே அவதரித்துத் திருவாவடுதுறை ஆதீனத்தில் மிக இளமைப் பருவத்திலேயே வந்தடுத்துத் தீட்சை முதலிய யாவும் பெற்றுச் சிறந்தனர். மகத்துவமிக்க அகத்திய முனிவர் வரத்தால் இவர் தோன்றியவராதலின் மிக எளிதாக வடமொழிக் கடலும் தென்தமிழ்க்கடலும் நிலைகண்டுணர்ந்தனர். இவருடைய தந்தையார் ஆனந்தக்கூத்தர் என்பவர்; தாயார் மயிலம்மையார் என்பவர். இவருக்கு ஒரு சகோதரர் உண்டு. சிறியதந்தையார் நமச்சிவாயக் கவிராயர்

ஆவார். அவர் சிங்கைப் பிரபந்தங்கள் பலவற்றைச் செய்து புகழ்பெற்ருர். ஏழு தலைமுறைகளில் தெய்விகப் பெரும் புலவர்களாக இவர் குடும்பம் விளங்கியது. அவர்கள் சந்ததியாரும் நல்ல கல்வியறிவு உடையவர்களாகவே விளங்கி வருகின்றனர்.

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகளுடைய ஞானுசாரியர் பேரூர் - வேலப்பதேசிகமூர்த்திகள். இவர்கள் பத்தாம் பட்டத்து வேலப்ப தேசிகமூர்த்திகள் காலத்தில் சின்னப்பட்டத்தில் இருந்தபடியே பேரூரில் சிவ பரிபூரணம் பெற்றனர். பேரூர் வேலப்பதேசிகர் அருளிய நூல் பஞ்சாக்கரப்பஃறொடை என்பது. அந்நூல் பண்டாரசாத்திரம் பதினன்கனுள் ஒன்ரும். பேரூர் வேலப்பதேசிகருக்குப் பின்னர் மற்ருெரு வேலப்பத் தம்பிரானைச் சின்னப்பட்டத்திலே இருத்தினர்கள். இவர்களே 11 - வது பட்டம் வேலப்பதேசிகமூர்த்திகள். இவர்கள் திருப்பெருந்துறையில் சிவபரிபூரணம் அடைந்தனர்.

இனி, திராவிடமாபாடியகாரராகிய இந்நூலாசிரியருடைய மாணவர்களில் இலக்கணம் - சிதம்பரநாத முனிவர் திருச்சிற்றம்பல தேசிகரிடத்தில் சிவதீட்சையும், சைவசந்நியாசமும், சிவஞானுேபதேசமும் பெற்றனர். இராமநாதபுரம் சோமசுந்தர குருவும் இந்த ஞானுசிரியரிடத்திலேதான் உபதேசம் பெற்றனர். கவிராக்ஷஸ - கச்சியப்ப முனிவரும், தொட்டிக்கலை - மதுரகவி - சுப்பிரமணிய முனிவரும், 12 - வது மகாசந்நிதானமாகிய திருச்சிற்றம்பலதேசிகர் பெரிய பட்டத்திலிருந்து சிவாகம ஆராய்ச்சியையே பொழுதுபோக்காகக் கொண்டிருந்தமையானும், சிவானந்த நிட்டையிலிருந்தமையானும் அப்போது சின்னப்பட்டத்திலுள்ள அம்பலவாணதேசிகர்பால் சைவசந்நியாசமும் சிவஞானுேபதேசமும் பெற்றுக்கொண்டனர்.

ஸ்ரீ சிவஞானசுவாமிகள்பால் மாணவர் யாவரும் இடையறாத பேரன்புகொண்டு மிக அச்சத்துடனும் ஒழுகிவந்தனர். மகாசந்நிதானங்களும் பேரருளுடன் நடத்திவந்தார்கள். திராவிடமாபாடியம், 11-வது பின் வேலப்பதேசிக மூர்த்திகள் பெரிய பட்டத்திலும் 12-வது திருச்சிற்றம்பலதேசிகமூர்த்திகள் சின்னப் பட்டத்திலும் எழுந்தருளியிருந்த காலத்திலே அரங்கேற்றப் பட்டது. திராவிட மாபாடியத்தைக் காஞ்சிபுரத்திலே சுவாமிகள் எழுந்தருளியிருந்து எழுதி முடித்தார்கள். பின்பு சிவஞானபோதத்துக்குச் சிற்றுரையும் சிவஞான சித்தியாருக்குப் பொழிப்புரையும் செய்தருளினர்.

இளம்பருவத்திலேயே மாணவர்கள் சிவநெறியில் வாழவேண்டிப் பிரபந்தங்கள் பலவற்றையும் செய்தார்கள். சிவதத்துவவிவேகம், தர்க்கசங்கிரகம் - அன்னம் பட்டீயம் முதலியவற்றையும் மொழிபெயர்த்தருளினர்கள். நன்னூலுக்குப் புத்தம்புத்துரை, இலக்கணவிளக்கச் சூறாவளி, தொல்காப்பியப் பாயிர விருத்தி, முதற் சூத்திர விருத்திகளும் செய்து இலக்கண நுட்பங்களையெல்லாம் நன்கு தெளிவுபடுத்தினர்கள். சிவஞான போதம் திராவிட மாபாடியத்துக்கு இன்றியமையாத இலக்கண இலக்கிய தர்க்கநூல் உணர்ச்சிகள் பெற வேண்டுவதற்கு ஆவனவெல்லாம் திருத்தமுறச்செய்து முடித்துப் பெரும் புகழ் படைத்தார்கள். சில கண்டன நூல்களையும் இவர்கள் எழுதியுள்ளார்கள்.

"கம்பராமாயண காவியம் ஒன்றுமே தமிழிற் சிறந்திருப்பது எனக்கொண்டு செருக்கொடு கழறிய காஞ்சீபுரத்து வைணவர்கள் வாயை அடக்கக் கருதி அக்கம்பராமாயணத்து நாந்தியாகிய 'நாடியபொருள் கைகூடும்' என்னும் செய்யுள் முற்றும் குற்றமே எனச் சங்கை செய்தவழி, அவ்வைணவர்கள் அச்சங்கைக்கு

உத்தரம்சொல்ல இயலாமல் வருந்தித் தெரியாது பிதற்றினேம் எனச் சொல்லி வணங்கித் துதித்தவழி, சிவஞானயோகிகள் மகிழ்ந்து உத்தரம்கூறி அவ்வைணவர்களை உவப்பித்தருளினர். அச்சங்கை உத்தரங்களை வரைந்த நூலுக்குக் 'கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி' என்று பெயர் வழங்கி வரு. கின்றது.''

பல்லாற்ருனும் சிறப்புற்று விளங்கிச் சிவானுபூதி கைவந்த இந்நூலாசிரியர் திருவாவடுதுறையிலே ஒரு சித்திரை மாதத்து ஆயிலிய நாளில் சிவபரிபூரணம் எய்தினர்.

''மன்னும் விசுவா வசுவருட மேடமதி
உன்னிரவி நாட்பகலோ தாயிலியம் - பன்னும்
திருவாளன் எங்கோன் சிவஞான தேவன்
திருமேனி நீங்கு தினம்''

என்னும் வெண்பா சுவாமிகள் சிவபரிபூரண நாளை யுணர்த்தும்.

இவர்களைப் பிரிதல் ஆற்ருத தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் ''நினைத்தாற் சகிக்கப்போமோ'' என்னும் பாடலால் தம் கருத்தை வெளிப்படுத்தினர். அன்றியும்; அவர் தொட்டிக்கலையில் சுவாமிகள் திருவுருவத்தை அமைத்துப் பூசித்து வழிபட்டார்.

உ

சிவமயம்

திருவாவடுதுறை ஆதீனத்து

ஸ்ரீ மாதவச்சிவஞானசுவாமிகள்மீது பாடிய

தோத்திரப்பாடல்கள்

கருணைபொழி திருமுகத்தில் திருநீற்று நுதலும்
கண்டாரை வசப்படுத்தக் கனிந்தவா யழகும்
பெருமைதரு துறவோடு பொறையுளத்திற் பொறுத்தே
பிஞ்ஞகனர் மலர்த்தாள்கள் பிரியாத மனமும்
மருவினர்கள் அகலாத ஞானமே வடிவாம்
வளர்துறைசைச் சிவஞான மாமுனிவன் மலர்ந்
ஒருபொழுதும் நீங்காமல் எமதுளத்திற் சிரத்தில் [தாள்
ஓதிடுநா வினிலென்றும் உன்னிவைத்தே
உரைப்பாம்.

திண்ணை இன்பச் சேவடியுந் திருவிழியுந்
திருமார்புஞ் செல்வக் கையும்
நண்ணும்அன்பர்க் கருள்கருணைத் திருமுகமும்
பசுங்குழவி நடையே யாகிப்
புண்ணியத்தின் பொலிவாகி யற்புதக்கோ
லக்கொழுந்தாய்ப் புலைநா யேற்குக்
கண்ணைவிட்டு நீங்காத சிவஞான
சற்குருவே கருணை வாழ்வே.

ஓதரிய வாய்மைச் சிவாகமங் கட்கெலாம்
உற்றபே ராகரமதாய்
ஓங்குதிரு வாவடு துறைப்பதியில் அற்புதத்
தொருவடிவு கொண்டருளியே

பேதமுறு சமயவா திகளுள மயக்கைப்
பெயர்க்கும்ரச குளிகையாகிப்
பிரியமுட னேவந் தடுத்தவர்க் கின்பப்
பெருங்கருணை மேருவாகி

ஆதரித் தடியேங்கள் உண்ணத் தெவிட்டாத
அமிர்தசா கரமாகியே
அழகுபொலி கலைசைச் சிதம்பரே சுரரடிக்
கதிமதுர கவிதைமாரி

மாதவர் வழுத்தப் பொழிந்தருளி யென்றுமவர்
மன்னிவளர் சந்நிதியிலோர்
மணிவிளக் கெனவளர் சிவஞான மாதவன்
மலர்ப்பதம் வணங்குவாமே.

— தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணியமுனிவர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி

நூற்பயன்

நாடிய பொருள்கை கூடும்
ஞானமும் புகழும் உண்டாம்
வீடுயர் வழிய தாக்கும்
வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை
நீறுபட் டொழிய வாகை
சூடிய சிலையி ராமன்
றோள்வலி கூறு வோர்க்கே.

இதனுட் சங்கையும் உத்தரமும் வருமாறு :-

சங்கை சிறிது காட்டுதும்.

'நாடிய பொருள்' எனவே எல்லாம் அடங்குதலின், 'ஞானமும் புகழும் உண்டாம்' எனவும், 'வீடுயர் வழியதாக்கும்' எனவும், 'வேரியங் கமலை நோக்கும்' எனவும் கூறுதல் கூறியது கூறலேயாம்.

இனி, ஈண்டுக் கூறிய நாடிய பொருள் முதலாயவற்றைத் தரும் இராமனை, அவை தருதற்குரிய சத்துவ குணத் தொழிலான் விசேடித்துக் கூறுதல் சிறிதும் சிறப்பின்றாம். இன்னும் சொற்றொறும் சிறிது சங்கை காட்டுதும்.

* 'நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு'

என்ப ஆகலின், தேடி வருந்தாது பெறப் பொருள் கைகூடிடச் செய்தலே செய்தலாம்; அவ்வாறன்றித் தேடிப் பெறப் பொருள் கைகூடிடச் செய்தல் செய்யாமையோடு ஒக்கும் ஆதலின், நாடாப்பொருள் கைகூடுமென்னாது 'நாடிய பொருள்' என்றல் சிறப்பிலதாம்.

பொருள்கள் பல ஆதலின் பன்மைப் பாலாற் கூறாது 'பொருள்' என்றல் வழுவாம்.

கூடும் எனவே அமைந்திருப்பக் 'கைகூடும்' என்றல் வேண்டாகூறலாம்.

இல்லறம் துறவறம், இம்மை மறுமை, போகம் மோக்கம் என்றாற்போலப் புகழ் முற்கூறி ஞானத்தைப் பிற்கூறல் மரபாம்; அவ்வாறன்றி 'ஞானமும் புகழும்' என்றல் முறைபிறழ வைத்ததாம்.

ஞானமும் புகழும் உள எனப்பன்மையாற்கூறாது ஞானமும் புகழும் என்னும் இரண்டு எழுவாய்க்கு 'உண்டு' என ஒருமைப்பாலாற் கூறியது வழுவாம்.

---

* திருக்குறள். 739.

உண்டு எனவே அமைந்திருப்ப 'ஆம்' என்பது நின்று பயனின்மையாம்.

வீடு என்று ஒழியாது 'உயர்வழியது' என்றல் மிகைபடக் கூறலாம்.

அன்றியும் வீடாகிய உயர்வழியது என இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகக் கொள்ளின், ஏற்றிடபம், யாட்டேறு என்றாற்போல வீட்டுயர்வழியது எனச் செய்கைப்பட்டுப் புணர்வதல்லது 'வீடுயர்வழியது' எனப் புணராதாம்.

'கைகூடும்', 'உண்டாம்', 'நோக்கும்' என்பனவற்றைத் தன்வினையாகக்கூறி 'ஆக்கும்' என இஃது ஒன்றனையும் பிறவினையாகக் கூறல் வழுவாம்.

வேரி இல்லாத கமலம் சிலவுளவாயின் அவற்றை நீக்குதற்கு வேரியங்கமலம் என விசேடித்தல் அமையும்; அவ்வாறு இன்மையின் 'வேரியங்கமலம்' எனப் பயனில்விசேடம் அடுத்தல் வழுவாம்.

கமலை குடிகொண்டுறையும் என்றது கடைக்கண்ணுற் சிறிது பார்க்கும் என்பதுபட நோக்கும் என்றமையால் அற்பச்செல்வம் எய்தும் எனப் பொருள்தருதலின் சிறப்பிலதாம்.

நிலைபேறின்றி அழிவுறும் அரக்கரை 'நீடிய அரக்கர்' என்றல் பொருந்தாதாம்.

அரக்கரெனவே அமைந்திருப்பச் 'சேனை' என்றல் மிகையாம்.

அன்றியும் அரக்கரது சேனை நீறுபட்டொழிந்த தன்றி அரக்கர் நீறுபட்டிலர் எனவும் பொருள்தருதலின் மயங்கவைத்தலாம்.

நீறுபட என்னது 'நீறுபட்டொழிய' என்றல் மிகையாம்.

நீறுபட்டொழிந்தபின் வாகை சூடுதலையொழிய 'வாகை சூடல்' என்றல் வழுவாம்.

பிரமாத்திரம் முதலிய ஏனைப் படைகளுமிருப்பச் 'சிலை இராமன்' என ஒன்றனையே கூறலமையாதாம்.

இராமனுக்கு அனந்த நற்குணங்களிருப்பத் தோள் வலியாகிய ஓரேகதேசமாத்திரையே கூறல் சிறந்தது அன்றாம்.

மனம் மொழி மெய்கள் என்னும் முப்பொறியுள் ஏனையவற்றை ஒழித்துக் 'கூறுவோர்க்கு' என ஒன்றன்வினை மாத்திரையே கூறல் சிறப்பிலதாம்.

இன்னும் முதற்பாட்டில் நீறுபட்டொழிய என அமங்கலச் சொல்லை வைத்தலும் வழுவாம்.

ஆதலின் இப்பாட்டு முழுதும் 'குற்றமேயாம் எனின்? அற்றன்று.

இனிச் சங்கைதீரப் பொருள் சிறிது காட்டுதும்.

ஒரு பொருளில் நாட்டமுற்றிருப்போர்க்கு அக் காலத்து வேறோர் பொருள் கைகூடின் அப்பொருளில் அவர்க்கு விருப்பம் செல்லாதாம்; அந்நாடிய பொருள் கைகூடின் மகிழ்ச்சி மேன்மேல் உண்டாம் ஆகலின்,

அவ்வாறு மகிழ்ச்சி உண்டாகும்படி 'நாடியபொருள் கைகூடும்' என்றார்.

1 "வேண்டுவார் வேண்டியதே ஈவான் கண்டாய்"

2 "மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே"

3 "எண்ணிய எண்ணியாங்கு எய்துப"

4 "உள்ளிய எல்லாம் உடனெய்தும்"

என்பனவெல்லாம் இக்கருத்தேபற்றி வந்தன என்க.

'நாடா வளத்தன' என்றது, நாடிவருத்தமுறாது எளிதினெய்தும் வளத்தினை உடையன என்பதேயாம். அது பரிமேலழகர் உரையானும் உணர்க.

நாடிய பொருள் - தேடிய பொருள் எனினும் அமையுமேனும், வேதத்தினும் சிறந்தது காயத்திரி, அதனினும் சிறந்தது எட்டெழுத்து ஆதலின், அவ்வெட்டெழுத்துள் சிறந்த நாராயண என்னும் பெயரின் முதலெழுத்தை முதற்கண் எடுத்து நீர் நாடிய பொருளென்றார்.

இனி, நாடிய பொருள்- மக்கட்கு உறுதிபயப்பன இவை எனச் சான்றோரான் ஆராய்ந்து ஓதப்பட்ட பொருளெனினும் அமையும். ஈண்டு நாடுதல் - ஆராய்தல். அது 5 "நாடாது நட்டலிற் கேடில்லை" என்பதனானும் உணர்க.

---

1 திருநாவுக்கரசர் - திருமறைக்காடு - 1.
2 ஷை ஐயாறு - 3. 3 திருக்குறள் - 666. 4. ஷை - 309.
5 ஷை. 791.

இனி இவ்வாறன்றி *''உண்ணிய புகிலவை ஒன்றும் இல்லையாம்' என்புழிப்போல 'நாடிய' என்பதனைச் செய்யிய என்னும் வினையெச்சமாக்கிக் கூறுவோரைப் பிறரெல்லாம் நாடும்படியாக அவர்க்குப் பொருள் கைகூடலும் என்றலும் ஒன்று.

இன்னும், நாடியாவது நரம்பு, அஃது ஆகுபெயரான் நரப்புக் கருவியாகிய யாழினை உணர்த்தும். உணர்த்தவே, நாடியின் பொருள் நாடிக்கண்ணவாகிய இசைப்பொருளாம். இசை ஒன்றாயினும் குரல், விளரி, உழை முதலிய பேதத்தால் பலவாதல்பற்றி நாடிய எனப் பன்மையாற் கூறப்பட்டது.

கையாவது ஒழுக்கம். எனவே இசைப்பொருளும் ஒழுக்கமும் கூடும் எனப் பொருள்கோடலும் ஆம். இவை போல்வனவெல்லாம் சிறந்த பொருள் அல்ல என்க.

பொருள் என்பது அஃறிணையியற்பெயராய் இருபாற்கும் பொதுவாய் நிற்றலின், ஈண்டுப் பன்மைக்கண் வந்தது. ''பொருளாதி அறுவகைப் பொருள்'' எனவும், ''நாற்பொருட் பயன்'' எனவும், ''பொருள் ஐந்தையும்'' எனவும், ''சொல்லினது பொருள்'' எனவும் கூறப்படுவன எல்லாம் பொருளேயாமேனும், ஈண்டுப் பொருள் என்றது நாடிய என்றதனால் கல்விப்பொருளும் செல்வப்பொருளுமே எனக்கொள்க.

''இருவகைப்பொருள் கல்விப்பொருள் செல்வப் பொருள்'' என்றார் திவாகரனார்.

---

* *திருநாவுக்கரசர் – நமச்சி - 3.*

" நற்பொருள் செய்வார்க்கு இடம்
பொருள் செய்வார்க்கும் அஃதிடம் "

என்றார் சிந்தாமணியார்.

பிறரும் இவ்வாறே கூறுவன காண்க. தலைமை பற்றிக் கல்விப்பொருள் முற்கூறிச் செல்வப்பொருள் பிற்கூறப்பட்டது. இனி,

" கலந்தாரைக் கைவிடுதல் "

1 " ஞாலங் கருதினுங் கைகூடும் "

" நூல்கால் யாத்த மாலை வெண்குடை "

2 " செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் "

3 " கொலைமேற் கொண்டாரின் கொடிதே "

என்புழிக் கை, கால், தலை, மேல் என்றாற்போல்வன இடைச் சொற்களாய்த் தாம் சேர்ந்த வினையைச் சிறப்பித்துப் பொருட்கு உபகாரப்பட்டு வரும். இவ்வாறு வருவனவற்றை வடநூலார் உபசர்க்கம் என்பர். அவ்வுபசர்க்கந்தான்,

" மருந்து கைகண்டென "

" இருள்கால் சீக்கும் "

எனச்சிலவிடத்துப் பகுதிப்பொருளையே சிறப்பித்தும்,

" விருந்து புறந்தருதல் "

---

1. திருக்குறள். 484. 2. ஷை - 258. 3. ஷை - 551.

" காரிகைதொடினும் "

எனச் சிலவிடத்துப் பகுதிப்பொருளை வேறுபடுத்தும் நிற்கும். ஈண்டுக்கையென்றதூஉம் அவ்வாறு இடைச் சொல்லாய்க் கூடுதலைச் சிறப்பித்து எளிதிற் கூடும் என்னும் பொருள்பட நின்றது.

இனி, இவ்விருவகைப் பொருளின் பயன் கூறு கின்றார்.

ஞானமும் புகழும் எனக் கல்விப்பொருட்குப் பயன் ஞானம், செல்வப் பொருட்குப் பயன் புகழ், அவ்விரண்டும் கைகூடிடப்பெற்றார்க்கு இவ்விரண்டும் உளவாம் என்பதாயிற்று. தலைமைபற்றிக் கல்விப் பொருளை முற்கூறிச் செல்வப்பொருளைப் பிற்கூறுதல் மரபாமாகலின், அவற்றின் பயனாகிய ஞானம் புகழ் களையும் அம்முறையே வைத்தார்.

ஞானமாவது வீடுபயக்கும் அறிவு. ஏனையறிவு விஞ்ஞானம் எனப்படும். இவ்வாறு வடமொழியுட் கூறப்பட்டது.

புகழாவது தாம் இறந்துழியும் தாம் நிகழ்த்திய வாறு உலகம் உயர்த்துக்கூற நிலைபெறுவது.

* " நத்தம்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது "

என்புழிப்போல உண்டு என்பதனைத்தனித்தனிக்கூட்டி முடிக்க.

---

* திருக்குறள். 235.

1 " வேறில்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன "

என்பதனுல், உண்டு என்பது பன்மைக்கும் பொது வாமாலோ எனின், அஃது ஈண்டைக்கு ஏலாது என்க. அம்முறை இங்ஙனம் விரிக்கின் பெருகும்.

கைகூடுதலான் என எடுத்து முடிக்க. முடிக்கவே,

2 " செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல் "

3 " ஆக்கந்தானே காரண முதற்றே "

என்னும் விதிபெற்று 'உண்டாம்' என ஆக்கமொடு கூறப்பட்டுக் காரணமுதற்ருய் வந்தவாறு காண்க.

இனி, அந்த ஞானத்தின் பயனும் புகழின் பயனும் கூறுகின்ருர்.

'வீடு உயர்வழியதாக்கும் வேரியம் கமலை நோக்கும்' என வீடும் உயர்வழியதும் எனப் பிரித்து எண்ணுக.

வீடாவது கட்டறுத்தல், உயர்வழியதாவது விரசை நதியினைக் கடந்துசெல்லும் உயர்ந்த வழியினை யுடைத்தாகி நிற்பதொரு பரமபதம். எனவே முத்தி இருவகைத்து என்பதாயிற்று

வீடு : தொழிற்பெயர்.

உயர்வழியது : வினைக் குறிப்புமுற்றுப் பெயர்ப் பகுபதம்.

---

1 நன்னூல். 339. 2, 3 தொல். சொல். 20, 21.

இவ்விரண்டும் ஞானுத்தானும் பயனெனப் பின்னெதுகைத் தொடைப்பட 'ஆக்கும்' 'நோக்கும்' எனக் கூறினாராகலின்,

1 "நட்பாடல் தேற்றாதவர்"

2 "தேற்றா ஒழுக்கம்"

என்புழிப்போல, ஈண்டுப் பொருட்கேற்ப ஆக்கும் என்பதனை ஆகும் எனத் தன்வினையாகவே கொள்க.

வடநூலாரும் இவ்வாறு தன்வினையைப் பிறவினையாகவும், பிறவினையைத் தன்வினையாகவும் இடங்கண்டு பொருள் கூறுப.

அற்றேல், 'கைகூடும்' 'உண்டாம்' 'நோக்கும்' என்பனவற்றையே 'ஆக்கும்' என்பதற்கு ஏற்ப, பிறவினையாகக் கொள்ளாமோ எனின் கொள்ளாம். என்னை? அவை எளிதினெய்தும் என்பதுபடத் தன்வினையாகவே கூறவேண்டுதலின். அன்றியும் அம்மூன்றும் தன்வினையாய் இஃதொன்று மாத்திரையே வேறுபட்டு நிற்றலின் அம்மூன்றற்கேற்ப இதற்கும் பொருள் கோடல் மரபாமல்லது, இவ்வொன்றற்கு ஏற்ப அம்மூன்றற்கும் பொருள்கோடல் மரபன்றாம் ஆகலானும், முன்னும் பின்னும் கூறிய வினைகட்கு ஏற்ப இடைநின்றதற்கும் பொருள்கோடலே மரபாம் ஆகலானும் இதனையே அவ்வாறு கூறுக என்பது.

இனி, நாடிய பொருள் முதலியன ஈண்டுக் கூறிய காரணங்களானன்றிப் பிற காரணங்களானும் எய்து

---

1 *திருக்குறள். 187.* 2 *நாலடியார். 75.*

மேனும் 'வீடுயர் வழியது' ஞானமொன்றுன் அல்லது எய்தாமையின் அவ்வுண்மை தோன்ற இதனை வேறு பிரித்து 'ஆக்கும்' என ஞானத்தின் வினைமுதலாக்கிக் கூறினர் என்றலும் ஒன்று.

திருமகள் வைகுதற்கு இடமாகப் பெற்ற கமலம் தேன் பெருக்கெடுப்ப ஆன்ற பேரழகின் வளம் மிகப் படைத்தவாறுபோல அவளான் நோக்கப்பட்டோரும் அவ்வாறு பெருவளம் பெற்றுத் திருவொடும் வாழ்வர் என உள்ளுறையுவமமாய்ப் பொருட்கு உபகாரப்படுமாறு இயைபின்மைநீக்கிய விசேடணம் கொடுத்து 'வேரியங்கமலை' என்ருர். நோக்குதல் அப்புகழுடையார்மாட்டுச் சேறற்கு அவரது செவ்விநோக்கி நிற்றல்.

* "கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து"

என்ருர் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனரும் என்க. எனவே, அத்துணைப் பெருஞ்செல்வமெய்துவர் என்பது பெறப்பட்டது.

நோக்கும் என்றது உபசாரம்.

ஞானத்திற்குப் பயன் வீடுபேறும், புகழிற்குப் பயன் செல்வமும் என்பதாயிற்று. ஆகவே தோள்வலி கூறுவோர் கல்விப் பொருளான் ஞானமெய்திப் பிறவிநீங்கி வீடுபேறு அடைவர்; செல்வப்பொருளான் ஈகை முதலிய அறஞ்செய்து புகழ் எய்தி மறுபிறவியினும் செல்வத்தை அடைவரென்பது பெறப்பட்டது.

---

* *திருக்குறள். 130.*

இவை இம்முறையே ஒன்றற்கொன்று பயனுதல்,

[1] " கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

என்பதனனும்,

[2] " ஈவார்மேல்நிற்கும் புகழ் "

[3] " புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி யெய்துப "

என்பவற்ருனும் உணர்க.

[1] " கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

என்புழிக் கற்ற காரணத்தான் மெய்ப்பொருள் காண்டலும், காண்டற் காரணத்தால் வாராநெறி தலைப்படுதலும் விளங்கியவாறு காண்க.

அற்றேல், கூறுவோர் வீடுபேறும் செல்வமும் எய்துவரெனின், அவ்விரண்டும் ஒன்றற்கொன்று மறுதலைப் பொருளாகலின் அவை ஒருங்கெய்துதல் எவ்வாறெனின்? அற்றன்று; நாடிய என்றதனுல் அவர் வேட்டது வரும் எனப் பொருள்கொள்க.

அற்றேல் அஃதாகுக. இதனுல் போந்தது தோள்வலி கூறுவோர்க்கு அக்கூற்றுப் பொருளும் வீடும் பயக்கும் என்பதாயிற்று. ஆகவே மக்கட்கு உறுதிப்

1 திருக்குறள். 356. 2 ஷை 232. 3 புறநானூறு. 27.

பயனெனக் கூறப்படும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கனுள் ஏனை அறமும் இன்பமும் பயவா போலும் எனின்? அற்றன்று.

1 " ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு "

2 " வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்தின் இருதலையும் எய்தும் "

என்பவற்றாற் பொருள் பயத்தல் கூறவே ஏனை அறமும் இன்பமும் பயத்தல் கூறாமையே பெறப்பட்டது. படவே கூறுவோர்க்கு நாற்பொருட்பயனும் எய்தும் என்பது பெறப்பட்டவாறு அறிக.

இனி, இவ்வாறன்றி 'நாடிய பொருள்' என்றது காமம், 'ஞானமும் புகழும்' என்றது இருவகையறம், 'வீடுயர் வழியது' என்றது வீடுபேறு, 'வேரியங்கமலை' என்றது பொருள் எனக்கொண்டு, கூறுவோர்க்கு இந்நால்வகைப்பொருளும் என இவ்வாறு கோடலு மொன்று.

நாடிய பொருள் என்றது காமம் ஆயவாறு என்னையெனின்? நாடி என்பது ஆகுபெயரான் யாழினை உணர்த்தி, இருமடியாகுபெயரான் அவ்யாழினையுடைய கந்திருவரை உணர்த்திற்று. யாழினையுடையார் பிறரும் உளரேனும் தலைமைபற்றிக் கந்திருவரையே உணர்த்தல் 3 " யாழுடையார் மணங்காண் " 4 " மெய்க்கிளை யாழோர் " என்பவற்றான் அறிக.

---

1 திருக்குறள். 760. 2 நாலடியார். 114.

3 திருக்கோவையார். 7. 4 நம்பியகப்பொருள். 28.

* " தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு "

என்புழி விளையுள் என்பது ஆகுபெயரான் உழவர்மே னின்றது என்றார் பரிமேலழகரும். ஆதலின் நாடி என்பது அவ்வாறு ஆகுபெயராதற்கு ஏற்குமாறறிக.

நாடி என்பது ஆகுபெயரால் கந்திருவரை உணர்த் தவே நாடிய என்பது அஃறிணைப் பன்மை வினைக் குறிப்புமுற்றுப் பெயராய்க் கந்திருவருடையனவா கிய பொருள் எனப்பட்டது. அப்பொருளாவது அன் புடைக் காமம். அது வகையான் ஐந்திணையாதலின் நாடிய எனப் பன்மையாற்கூறப்பட்டது.

இனி, நாடி என்பதனை யாழாகவேவைத்து அதனை உடைய பொருளாகிய கந்திருவத் தெய்வம் எனக் கொண்டு, கை என்பதனை ஒழுக்கம் எனக்கொண்டு, கந்திருவத் தெய்வத்தின் ஒழுக்கமாகிய அன்புடைக் காமம் எனினுமாம். காமப்பொருட்கு உரிய பிரமம் தெய்வம் முதலிய பிற மணமும் உளவேனும் அவை யும் அடங்கும்.

இனி, ஞானமும் புகழும் அறமாயவாறு என்னை யெனின் ? துறவறத்தின் பயன் ஞானம், இல்லறத் தின் பயன் புகழ் ; அவை ஆகுபெயரால் தத்தம் கார ணங்களாகிய அவ்வறங்களை உணர்த்தின்ற என்பது.

அற்றேல் அஃதாக, அறம் பொருள் இன்பம் வீடு என இம்முறை வையாது முறை பிறழ வைத்தது என்னையோ எனின் ?

---

* *திருக்குறள். 731.*

* "படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

என்புழிப் போலச் செய்யுள் நோக்கி முறை பிறழ வைத்தார் என்க.

இதுவும் ஒருபொருள்.

இன்னும் இவ்வாறு விரிக்கின் பெருகுமாதலான் அமைக.

இனி, நாடிய பொருள் கைகூடுதற்குக் காரணம் கூறுகின்றார்.

'நீடிய......கூறுவோர்க்கே' என நீடிய அரக்கர் என்பது நீடிய வரத்தினையுடைய அரக்கர் என்பதாம். வரத்தின் நிலைபேறு உபசாரத்தால் அதனை உடையார் மேல் ஏற்றப்பட்டது.

இதனால் அவர் வரத்தின் பெருமை கூறியவாறு.

அரக்கர் சேனை-அரக்கரும் அவர் சேனையும் எனப் பிரித்து எண்ணுக.

நீடிய என்றதனால் அரக்கர் என்றது இராவணன் இந்திரசித்து முதலிய தலைவர்மேல் நின்றது. சேனை அவருடைய நால்வகைப் படையும்.

இனி, எள்ளது குப்பை என்றது போல அரக்கரது சேனை என ஒன்றன் கூட்டமாகிய தற்கிழமைப் பொருள்பட உரைத்தலும் ஒன்று.

---

* *திருக்குறள் 381.*

நீறுபட்டு - நீருதலையுற்று; என்றது நெருப்பின் வெந்து நீருயதற்குப் பழைய பெயர் தோன்ருதவாறு போல இவரும் பின்னெருகாலத்து உய்யுமாறின்றி அழிந்தேவிட்டமை தோன்ற நீறுபட என்ருெழியாது 'நீறுபட்டொழிய' என்ருர்.

இனி, நீடிய என்பதனைச் செய்யிய என்னும் வினையெச்சமாக்கிக் கடவுளர் நீடும்படியாக அரக்கர் சேனை 'நீறுபட்டொழிய' எனினுமாம்.

'மருந்து தின்ன நோய் தீர்ந்தது' என்ருற்போல, ஒழிய என்றது காரண காரியப் பொருட்டாய் இறந்த காலத்தின்கண் வந்து, சூடிய என்னும் பெயரெச்ச வினை கொண்டது.

வெற்றியையும் வெற்றி கொண்டார் சூடும் வாகைத் தொடையையும் உணர்த்திப் பல பொருளொருசொல்லாய் நிற்கும் வாகை என்பது, சூடிய என்னும் வினையால் ஈண்டு மாலையை உணர்த்திற்று.

சூடிய என்னும் பெயரெச்சம் சிலை என்னும் பெயரொடு முடிந்தது என்க. எனவே அளவிலாற்றலுடைய இராமன் தன்வலிக்கு நிகரில்லாத அரக்கரை வென்றதனுல் பெற்ற வாகையைத் தான் சூடுதலாற் பெருமிதமின்மையின் தன் சிலைக்குச் சூடினன் என்பதாயிற்று.

தோள் வலி - தோளும் வலியும் எனப் பிரித்து எண்ணுக.

தோள் என்றது சினையாகு பெயரான் முதலாகிய இராமவிக்கிரகத்தின்மேல் நின்றது.

வலியாவது மிடல்.

இராமவிக்கிரகத்தினை மனத்தால் தியானம் செய்யினும் வாயான் வாழ்த்தினும் இதுபற்றி அவர்கள் பாற் சயமடந்தை குடிகொண்டு வாழும்; வாழவே பகைவர் தருக்கற வென்று உலகமுழுதும் தம்மடிப் படுத்துப் பெருஞ்செல்வம் எய்துபவாகலின் தோள் கூறுவார்க்கு நாடிய கல்விப்பொருள் கைகூடி ஞானமுண்டாய் வீடுயர் நெறியதாக்கும் எனவும், வலி கூறுவோர்க்கு நாடிய செல்வப்பொருள் கைகூடிப் புகழுண்டாய் வேரியங்கமலைநோக்கும் எனவும் நிரனிறை வைத்துப் பொருள்கொள்க.

முப்பொறியுள் கூறுவோர்க்கு என வாக்கின் தொழிலொன்றனையே கூறினர், நினைப்பினும் இறைஞ்சினும் தமக்கே பயனும்; வாயாற் கூறுங்கால் தமக்கும் பிறர்க்கும் பயனுமாதலின் அத்தலைமைபற்றி என்க.

நிலைபெற்ற வரம் பெற்றிருந்தும் தனக்கு வணங்காத அரக்கர் நீறுபட்டொழியச் செய்தான்.

பரசுராமன் அரசர் குலமெல்லாம் மழுவானே துணித்து, வாகைமுழுதும் மழுப்படையே பெறச் செய்தலின் அவன்கரத்திருக்குங்காறும் வாகைபெறுது வறங்கூர்ந்த சிலை தனக்கு வணங்குதலான் அது மேம்பட்டு வாகைசூடச் செய்தான். இவ்வாறு துட்ட நிக்கிரக சிட்டபரிபாலனம் செய்தலின் அத்தன்மையனுகிய இராமன் தோள்வலிகளைக் கூறுவோர்க்கு நாடிய பொருள் கைகூடும் - ஞானமும் புகழும் உண்டாம் - வீடுயர் வழியதாக்கும் - வேரியங்கமலை நோக்கும் என்பதற்கேற்ப, நீடிய அரக்கர் சேனை நீறுபட்டொழிய

வாகை சூடிய சிலை இராமன் தோள் வலி என்பது இயையக் கிடந்தவாறு காண்க.

பகைவர் அமங்கலம் எய்துதல் ஏனையோர்க்கு மங்கலமே ஆதலின் அரக்கர் சேனை நீறுபட்டொழிய என்றல் ஈண்டு மங்கலமேயாம் என்க.

இனி நீடிய சூடிய என்பவற்றை வாழிய என்பது போல வியங்கோளாக்கி, கைகூடும் உண்டாம் என்பனவற்றைச் செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சமாக்குக.

ஆக்கு, நோக்கு, என்பனவற்றை முதனிலைத் தொழிற்பெயராக்கி, அங்ஙனம்நின்ற உம்மைகளை எண்ணும்மையாக்கிப் பொருள் என்பதனோடும் உம்மையைக்கூட்டி, சிலை இராமன் தோள்வலி கூறுவோர்க்கு, நாடப்படும் பொருளும் கைகூடுவதாகிய ஞானமும் புகழும் உண்டாவதாய் வீடுயர் வழியதாக்கும் வேரியங்கமலையது நோக்கமும் நீடுக; பகைவர்சேனை நீறுபட்டொழிய, வாகை சூடப்படுக என வாழ்த்தாகப் பொருளுரைத்தலும் ஒன்று.

இப்பொருட்கு அரக்கினையுடையார் அரக்கர், அரக்காவது சிவப்பு. சிவப்பு - வெகுட்சி. வெகுட்சியினையுடையார் செறுநர் எனப் *புத்திசேனனைத் திங்கள் விரவிய பெயரினன் என்றாற்போல் கொள்க.

---

* புத்திசேனன் என்றது சீவகன்தோழர் நால்வருள் ஒருவனெனச் சிந்தாமணியிற் கூறப்பட்டது.

"செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே"

என்ப ஆகலின் சூடுக என்பது சூடப்படுக எனப் பட்டது.

மழுப்படை அலப்படையுடைய இராமரின் நீக்குதற்குச் 'சிலை இராமன்' எனப் பிறிதினியைபு நீக்கிய விசேடணத்தான் விசேடிக்கப்பட்டது.

இனி, இதன் அகத்திலக்கணங்களை விரிக்கப்புகின் பெருகும். பொருள் புறம், திணை பாடாண், மெய்ப்பாடு பெருமிதமும் வெகுளியும் உவகையும் வந்தவாறு காண்க.

அலங்காரம் காரணமாலை.

செய்யுள் ஆசிரியவிருத்தம்.

பொருள்கோள் விற்பூட்டு.

ஏனையவும் கண்டு கொள்க. ஈண்டு உரைப்பின் பெருகும்.

முதல் இடை கடை என்னும் மூவகைக் காப்பியத்துள்ளும் உத்தம காப்பியத்துக்கு இலக்கணமாவது * 'உள்ளுறைப்பொருணிலையல்' என்ப. இஃதும் உத்தம காப்பியத்தின் முதற்செய்யுளாதலின் அதன் சொற்பொருளொழிய உள்ளுறைப் பொருள் யாது எனின் கூறுதும்.

---

* தொல்காப்பியம். சொல். வினையியல். சூ. 40.

கூறுவோர்க்கு என்றதனுல் இராமன் தோள் வலியை இக்கம்பராமாயண முளவாம் எனக் காப்பியப் பயன் கூறியவாறு இப்பாட்டின் கருத்து என்க.

இதனையே பாயிரத்துள் விளங்கக் கூறுப. இங்ஙனம் ஒருவாறு சுருக்கி உரைத்தாம்; விரிப்பிற்பெருகும்.

திருவாவடுதுறை ஆதீனத்துச் சிவஞான மாதவனுற்
செய்யப்பட்ட கம்பராமாயண முதற்செய்யுட்
சங்கோத்தர விருத்தி முடிந்தது.